ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2083/37 - 2018 අගෝස්තු මස 10 වැනි සිකුරාදා - 2018.08.10
2083/37 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) சட்டம்*

*1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 14 ஆம் பிரிவு மற்றும் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 20 ஆம் பிரிவின் கீழ், அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள்.*

மலிக் சமரவிக்ரம,
அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச
வர்த்தக அமைச்சர்.

கொழும்பு,
*2018, ஓகத்து 10.*

ஒழுங்கு விதிகள்

இந்த ஒழுங்கு விதிகள் 2018 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்கு விதிகள் என எடுத்துக் காட்டப்படும். 2013 ஏப்பிறல் 03 ஆந் திகதிய 1804/17 ஆம் இலக்க (அதிவிசேட) வர்த்தமானி மற்றும் 2018, யூலை 13 ஆந் திகதிய 2079/70 ஆம் இலக்க (அதிவிசேட) வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

(2) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற அனைத்து மோட்டார் வாகனங்களும் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2079/42 ஆம் இலக்க 2018.07.12 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் மூன்றாவது அட்டவணையில் அல்லது 2083/3 ஆம் இலக்க 2018.08.06 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் ஐந்தாம் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்ட வாகன மாசு வெளியேற்றல் வரையறை மற்றும் காலத்திற்கு காலம் வெளியிடப்படும் திருத்தங்களுக்கு இணங்குதல் வேண்டும்.

(3) அட்டவணை I இன் நிரல் IV இல் குறிப்பீடு செய்யப்பட்ட இயைபு முறைக் குறியீட்டின் கீழ் வருகின்ற இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் அனைத்தும் அட்டவணை I இன் நிரல் III இன் கீழ் குறிப்பீடு செய்யப்பட்டவாறான பாதுகாப்பு நடவடிக்கைகள்/தராதரங்களுடன் இணங்குதல் வேண்டும்.

(4) இந்த ஒழுங்கு விதிகளின் நோக்கத்திற்காக:

(அ) இயைபு முறைக் குறியீட்டு அத்தியாயம் 87 இன் கீழ் வகுப்பாக்கம் செய்யப்படக்கூடிய புதிய மோட்டார் வாகனங்களின் இறக்குமதி மேலே குறிப்பீடு செய்யப்பட்ட மாசு தராதரம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்/தராதரங்களின் இணக்கப்பாட்டுக்கு பயன்வலுக்கொடுக்கும் வகையில் அத்தகைய மோட்டார் வாகனங்களின் தயாரிப்பாளரினால் வழங்கப்பட்ட தயாரிப்பாளர் சான்றிதழினை கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) மேலே (அ) பந்தியில் குறிப்பிடாத அனைத்து மோட்டார் வாகனங்களின் இறக்குமதி,காலத்திற்கு காலம் திருத்தப்பட்ட, 2013 ஏப்பிறல் 03 ஆந் திகதிய 1804/17 ஆம் இலக்க (அதிவிசேட) வர்த்தமானியின் 3 ஆம் வாசகத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட கப்பலேற்றலுக்கு முன்னரான பரிசோதனைச் சான்றிதழ், மேலே குறிப்பீடு செய்யப்பட்ட மாசு தராதரம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கை /தராதரங்களுக்கு இணங்கியதான உறுதிப்படுத்தல் சான்றிதழ் ஒன்றினை கொண்டிருத்தல் வேண்டும். கப்பலேற்றலுக்கு முன்னரான பரிசோதனைச் சான்றிதழ் காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான 2013, ஏப்பிறல் 3 ஆம் திகதிய 1804/17 ஆம் இலக்க (அதிவிசேட) வர்த்தமானியினால் நியமிக்கப்பட்ட அங்கீகாரம் வழங்கப்பட்ட பரிசோதகரினால் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(5) வாசக இலக்கம் 3 இல் குறிப்பீடு செய்யப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள்/ தராதரங்கள் என்பன அட்டவணை II இல் பட்டியலிடப்பட்ட இயைபு முறை குறியீட்டின் கீழ் வரும் மோட்டார் வாகனங்களுக்கு ஏற்புடையதாகாது.

(6) இயைபு முறை குறியீட்டு முறைமையின் அத்தியாயம் 87 இன் கீழ் மோட்டார் வாகனங்களின் இறக்குமதிக் கடன் கடிதத்தினால் மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் அத்தகைய மோட்டார் வாகனங்களை கப்பலேற்றுவதற்கு முன்னர் தாபிக்கப்பட்டிருத்தல் வேண்டும். இந்த ஒழுங்கு விதிகளில் குறிப்பீடு செய்யப்பட்ட மாசு தராதரங்கள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்/தராதரங்கள் என்பன மோட்டார் வாகனங்களின் இறக்குமதி நோக்கத்திற்கான ஏதேனும் கடன் கடிதங்களை தாபிப்பதற்கான இணக்கப்பாட்டிற்கு கட்டாயத் தேவையாக இருத்தல் வேண்டும்.

(7) மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாசு தராதரங்கள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்/தராதரங்களுடன் ஒத்திசையாத மோட்டார் வாகனங்கள் இறக்குமதியாளரின் செலவில் மீள் ஏற்றுமதி செய்யப்படுதல் வேண்டும்.

(8) 2018, யூலை 13 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் தாபிக்கப்பட்ட கடன் கடிதங்களை அடிப்படையாகக் கொண்ட மோட்டார் வாகன இறக்குமதிகளுக்கு இந்த ஒழுங்கு விதிகள் ஏற்புடையதாகமாட்டாது. எவ்வாறாயினும், 2018, ஒற்றோபர் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் இறக்குமதி செய்யப்படும் அத்தகைய மோட்டார் வாகனங்களுக்கான அத்தகைய கடன் கடிதங்களுக்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்படமாட்டாது. மேலும் அவ்வாகனம் 31.10.2018 ஆந் திகதிக்கு முன்னர் இலங்கை சுங்கத் திணைக்களத்திலிருந்து விடுவிக்கப்படல் வேண்டும்.

**அட்டவணை - I பாதுகாப்பு நடவடிக்கைகள்/தராதரங்கள்**

| I | II | III | | | IV | V |
|---|---|---|---|---|---|---|
| இல | இயைபு முறைக் குறியீட்டு தலைப்பு | பாதுகாப்பு நடவடிக்கைகள் | | | ஏற்புடைய இயைபு முறைக் குறியீடு | ஏற்புடையதாகாத இயைபு முறைக் குறியீடு |
| | | காற்றுப் பைகள் | இருக் கைப் பட்டி | ஏபிஎஸ் | | |
| 01 | 87.02 | C | C | C | 8702.10.12,8702.10.13, 8702.10.19,8702.10.21, 8702.10.29,8702.10.32. 8702.10.33,8702.10.39, 8702.10.41,8702.10.49<br><br>8702.20.11,8702.20.12, 8702.20.19,8702.20.21, 8702.20.29,8702.20.31, 8702.20.32,8702.20.39, 8702.20.41,8702.20.49 | நிரல் IV இலுள்ள இயைபுமுறைக் குறியீடுகள் தவிர்ந்த இயைபு முறைக் தலைப்பு 87.02 இன் கீழ்வரும் இ.மு. குறியீடுகள் |

அட்டவணை - I பாதுகாப்பு நடவடிக்கைகள்/தராதரங்கள் *(தொடர்ச்சி)*

| I | II | III | | | IV | V |
|---|---|---|---|---|---|---|
| இல | இயைபு முறைக் குறியீட்டு தலைப்பு | பாதுகாப்பு நடவடிக்கைகள் | | | ஏற்புடைய இயைபு முறைக் குறியீடு | ஏற்புடையதாகாத இயைபு முறைக் குறியீடு |
| | | காற்றுப் பைகள் | இருக் கைப் பட்டி | ஏபிஎஸ் | | |
| | | | | | 8702.30.11,8702.30.12, 8702.30.19,8702.30.21, 8702.30.29,8702.30.31, 8702.30.32,8702.30.39, 8702.30.41,8702.30.49<br><br>8702.40.11,8702.40.12, 8702.40.19,8702.40.21, 8702.40.29,8702.40.31, 8702.40.32,8702.40.39, 8702.40.41,8702.40.49<br><br>8702.90.12, 8702.90.13, 8702.90.19, 8702.90.21, 8702.90.29, 8702.90.32, 8702.90.33, 8702.90.39, 8702.90.41, 8702.90.49 | |
| 02 | 87.03 | C | C | C | நிரல் V இலுள்ள இயைபுமுறைக் குறியீடுகள் தவிர்ந்த இயைபு முறைக் குறியீட்டுத் தலைப்பு 87.03 இன் கீழ்வரும் இ.மு. குறியீடுகள் | 8703.10.11,8703.10.19, 8703.10.21,8703.10.29<br><br>8703.21.30,8703.21.40, 8703.21.51,8703.21.52, 8703.21.53, 8703.21.54, 8703.21.55,8703.21.62, 8703.21.64, 8703.21.73<br><br>8703.22.30,8703.22.40<br><br>8703.23.30,8703.23.40<br><br>8703.24.30, 8703.24.40<br><br>8703.31.30, 8703.31.40, 8703.31.50,8703.31.60<br><br>8703.32.30, 8703.32.40<br><br>8703.33.30, 8703.33.40<br><br>8703.40.13,8703.40.14, 8703.40.15, 8703.40.16, 8703.40.21,8703.40.22, 8703.40.25,8703.40.26, 8703.40.33, 8703.40.34, 8703.40.43,8703.40.44, 8703.40.63,8703.40.64, 8703.40.83,8703.40.84 |

**அட்டவணை - I பாதுகாப்பு நடவடிக்கைகள்/தராதரங்கள்** *(தொடர்ச்சி)*

| I | II | III | | | IV | V |
|---|---|---|---|---|---|---|
| இல | இயைபு முறைக் குறியீட்டு தலைப்பு | பாதுகாப்பு நடவடிக்கைகள் | | | ஏற்புடைய இயைபு முறைக் குறியீடு | ஏற்புடையதாகாத இயைபு முறைக் குறியீடு |
| | | காற்றுப் பைகள் | இருக் கைப் பட்டி | ஏபிஎஸ் | | |
| | | | | | | 8703.50.13,8703.50.14, 8703.50.15,8703.50.16, 8703.50.21,8703.50.22, 8703.50.25,8703.50.26, 8703.50.33,8703.50.34, 8703.50.43,8703.50.44, 8703.50.63,8703.50.64, 8703.50.83, 8703.50.84<br><br>8703.60.13, 8703.60.14, 8703.60.15,8703.60.16, 8703.60.21,8703.60.22, 8703.60.25,8703.60.26, 8703.60.33,8703.60.34, 8703.60.43,8703.60.44, 8703.60.63,8703.60.64, 8703.60.83,8703.60.84<br><br>8703.70.13, 8703.70.14, 8703.70.15,8703.70.16, 8703.70.21,8703.70.22, 8703.70.25,8703.70.26, 8703.70.33,8703.70.34, 8703.70.43,8703.70.44, 8703.70.63,8703.70.64, 8703.70.83,8703.70.84<br><br>8703.80.11,8703.80.12 |
| 03 | 87.04 | C | C | C | 8704.21.65, 8704.21.66, 8704.21.67, 8704.21.68<br><br>8704.31.65, 8704.31.66, 8704.31.67, 8704.31.68<br><br>8704.21.71, 8704.21.72, 8704.21.91, 8704.21.92, 8704.21.93, 8704.21.99<br><br>8704.31.71, 8704.31.72, 8704.31.91, 8704.31.92, 8704.31.93, 8704.31.99 | நிரல் IV தவிர்ந்த இ.மு.கு. தலைப்புக்கு காற்றுப் பைகள் தேவைப்படுத்தப்பட மாட்டாது.<br><br>முச்சக்கர வண்டிகளுக்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் தேவைப்படுத்தப்படமாட்டாது. (8704.21.21,8704.21.22<br><br>8704.31.21,8704.31.22, 8704.31.23<br><br>8704.90.10,8704.90.20) |
| 04 | 87.05 | - | C | C | இயைபு முறைத் தலைப்பு 87.05 இன் கீழ்வரும் இ.மு. குறியீடுகள் | - |

* (C – தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள்)

## அட்டவணை - II

| இல. | இயைபு முறைக் குறியீட்டு தலைப்பு |
|---|---|
| 01 | 8701 |
| 02 | 8706 |
| 03 | 8707 |
| 04 | 8708 |
| 05 | 8709 |
| 06 | 8710 |
| 07 | 8711 |
| 08 | 8712 |
| 09 | 8713 |
| 10 | 8714 |
| 11 | 8715 |
| 12 | 8716 |

குறிப்பு:

1. **இருக்கைப் பட்டி** - இருக்கைப் பட்டியினைப் பொருத்தவரை, சாரதி மற்றும் முன்ஆசன பயணிகள் மூன்று புள்ளி இருக்கைப் பட்டிகளையும் ஏனைய பயணிகள் ஆகக்குறைந்தது இரண்டு புள்ளி இருக்கைப் பட்டிகளையும் கொண்டிருப்பது ஏற்புடையதாகும்.

2. **காற்றுப் பைகள்** - சாரதி மற்றும் முன்ஆசன பயணிகள் தரநிலை காற்றுப் பைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. **ஏ.பி.எஸ்** - அனைத்து வாகனங்களும் அன்டி - லொக்கிங் பிரேகிங் சிஸ்டத்துடன் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

8-936

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.